A new initiative for racial harmony

# இன நல்லிணக்கத்துக்குப் புதிய அமைப்பு

சிங்கப்பூர் கூட்டுச் சமூகச் சேவை நிலையம் சீரமைக்கப்படுகிறது. சீரமைக்கப்பட்ட புதிய நிலையம், சிங்கப்பூரின் ஐந்து நகர மேம்பாட்டு மன்றங்கள், ஐந்து சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் வளங்களை ஒன்று திரட்டும். புதிய அமைப்புக்கு ஒன்பீப்பிள்ஸ்.எஸ்ஜி (OnePeople.sg) என்று பெயர்.

பிரதமர் லீ சியன் லூங் நேற்று இந்த விவரங்களைத் தெரிவித்தார். புதிய அமைப்பு நம் சமூகத்தில் புதிய நடவடிக்கைகள் வழியாக இன நல்லிணக்கத்தை வலுப்படுத்தும். பல்வேறு இன சமயங்களுக்கு இடையில் கலந்துறவாடலைப் பேணி அதிகப்படுத்தும் என்று திரு லீ குறிப்பிட்டார்.

மத்திய நகர மேம்பாட்டு மன்றத்தின் 10ம் ஆண்டு நிறைவு நாளை ஒட்டி நடந்த விழாவில் பிரதமர் உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய பிரதமர், 1997ம் ஆண்டு நகர மன்றங்கள் உருவாக்கப் பட்டதை நினைவு கூர்ந்தார்.

அப்பொழுது சிங்கப்பூரின் தலையாய தேவை சமூகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதாக இருந்தது. எனினும், இன்று மாறி வரும் தேவைகளுக்கு ஏற்ப நகர மன்றங்கள் தங்களுடைய பணிகளை மாற்றிக்கொண்டுள்ளன.

இன்று சமூக ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்தப் பொது மக்கள் பல்வேறு சமூக சேவைகளான ஊழியர் நல போனஸ், வேலை வாய்ப்புத் திட்டங்கள், பொதுமக்கள் நலத் திட்டங்கள் ஆகியவற்றின் பயனைப் பொது மக்கள் பெறும் வண்ணம் நகர மன்றங்கள் தங்களை மாற்றிக் கொண்டுள்ளன என்றார் பிரதமர்.

இந்தச் சேவைகளை செவ்வனே வழங்க, நகர மன்றங்கள் சுமார் 300 அடித்தள ஊழியர்களுடன் சென்ற ஆண்டு பணி புரிந்துள்ளன. மேலும், தங்கள் சமூகத் தேவைகளைக் கவனிக்க, சுமார் 3,000 தொண்டூழியர்களையும் இவை திரட்டின என்றார்.

வருங்காலத்தில், நகர மன்றங்கள் சமூக ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் நல்லிணக்கத்தை வளர்க்கவும் மேலும் சிறந்த பணி ஆற்ற வேண்டுமென்பதே தமது அவா என்றார். இதில் நாம் எதிர்நோக்கும் முக்கிய சவால்களில் ஒன்று இன நல்லிக்கணமும் சமூக தன்னம்பிக்கையும் என்றார்.

பல இன, சமய மக்களைக் கொண்ட சிங்கப்பூரில் நாம் நியாய உணர்வையும் மக்களுக்கு இடையே உள்ள நம்பிக்கையையும் வளர்க்க வேண்டும். இது சிங்கப்பூரில் இப்போது நிலவுகிறது என்றாலும் இது காலந்தோறும் நீடித்து இருக்கும் என்று நாம் அசட்டையாக இருந்து விட முடியாது.

சிங்கப்பூரைப் பாதுகாப்பாகவும் ஒற்றுமையுடன் வைத்துக்கொள்ள நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். மக்கள் தங்கள் தகுதிக்கேற்ப சமுதாய வாய்ப்புக்களைப் பயன்படுத்தித் தகுதி அடிப்படையில் முன்னேற அரசாங்கம் பாடுபடும்.

இதில் சிறுபான்மை மக்கள் தங்கள் மரபுடைமைகளைப் பாதுகாத்து பெரும் பான்மை மக்களின் நெருக்குதல் இல்லாமல் வாழ்க்கையில் முன்னேற வழி வகுக்கப்படும்.

நமது சமூக, சமய அமைப்புகள் மக்களிடையே புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் பேணிப் பாதுகாப்பது முக்கியம் என்பதை உணர்ந்தே புத்திஸ்ட் லாட்ஜ், இந்து அறக்கட்டளை வாரியம் மற்றும் ஜமியா ஆகியவை இணைந்து இன சமய பாகுபாடின்றி ஆண்டு தோறும் 1,000 வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்வி உதவி நிதி வழங்கப் படுவதாகக் கூறினார் திரு லீ.



ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்

ஆர்ட்ஸ் ஹவுஸில் நேற்று நடைபெற்ற மத்திய நகர மேம்பாட்டு மன்றத்தின் 10வது ஆண்டுநிறைவு விழாவில் பங்கேற்ற பிரதமர் லீ சியன் லூங், அங்கு சிறுவர்களுடன் விளையாடி மகிழ்ந்தார்.